* தற்காலிக ஸ்கொட்ரன் லீடர்.- சிவில்/ இயந்திரவியல் பொறியியலில் பட்டம் (கட்டிடக் கலை பொறியியலில்) BSc பட்டம் வளிசீராக்கிகள், நீர் விநியோகம், மருத்துவ வசதி, பொது மக்கள் சுகாதாரம், தீயணைப்பு வசதி, மின்சார விநியோகம் போன்றவற்றில் புதிய தொழில்நுட்பத்தை பிரயோகித்தல் போன்றவற்றில் BSc பட்டத்துடன் பதவி சம்பந்தமாக குறைந்தபட்சம் 2 வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இலங்கை வான்படையில் ஸ்கொட்ரன் லீடர் (Squardan Leader) நிலையில் அதிகாரியாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

*சிவில்/பொறியியல்/மின்னியல் பொறியியல் அதிகாரி - ஆண் (நிரந்தர) :*

* ப்ளைட் லெப்டினன்ட்.- சிவில்/ பொறியியல்/ மின்னியல் பொறியியலில் BSc பட்டத்துடன் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருத்தல்.

* ப்ளையிங் ஒபீசர்.- சிவில்/ பொறியியல்/ மின்னியல் பொறியியலில் NDT/NDES/HNDE அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருப்பதுடன் 3 வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

* ப்ளைட் ஒபீசர்.- சிவில்/ பொறியியல்/ மின்னியல் பொறியியலில் NDT/NDES/HNDE அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருப்பதுடன் துறைசார்ந்த அனுபவம் இல்லாத விண்ணப்பதாரிகள் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

*வாஸ்து நிபுணர் - ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்) :*

* தற்காலிக ஸ்கொர்டன் லீடர்.- பெற்றுக்கொண்ட வாஸ்து அனுபவம் இருத்தல் வேண்டும்.

* ப்ளைட் லெப்டினன்ட்.- BSc (BE) பட்டமுடன் 1 வருட அனுபவம் அல்லது மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் பெற்ற B/Arch பட்டம் இருத்தல் வேண்டும்.

*நிலஅளவையாளர் - ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்) :*

* ப்ளைட் லெப்டினன்ட்.- மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் BSc in (QS) பட்டம் அல்லது இலங்கை நிலஅளவையாளர் அமைப்பில் (Graduate Member) உறுப்பினராக இருத்தல் குறைந்தபட்சம் இரண்டு (02) வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது இலங்கை நிலஅளவையாளர் அமைப்பில் (Technical Member) உறுப்பினராகவிருப்பதுடன் பதவி சம்பந்தமாக குறைந்தபட்சம் மூன்று (03) வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

* ப்ளையின் ஒபீசர்.- இலங்கை நிலஅளவையாளர் அமைப்பில் (Technical Member) ஆகவிருப்பதுடன் இரத்மலானை நிலஅளவையாளர் UNIVOTEC அமைப்பில் டிப்ளோமா முடிதிருத்தல் மற்றும் குறைந்தபட்சம் இரண்டு (02) வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

*அளவையாளர் - ஆண் (நிரந்தர/தொண்டர்) :*

* ப்ளைட் லெப்டினன்ட்.- சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பெற்ற அளவையாளர் BSc பட்டம் இருத்தல் வேண்டும். தியத்தலாவை அளவு மற்றும் வரைபட தாபனத்தில் ISM டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

* ப்ளையின் ஒபீசர்.- தியத்தலாவை அளவு மற்றும் வரைபட தாபனத்தில் ISM டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) ***பல் வைத்தியப் பிரிவு :***

*பல் அறுவை மருத்துவர் - ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்)*

* ப்ளைட் லெப்டினன்ட்- BDS அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் SLMC அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

பயிற்சி பெறும் (Pre-Intern) வைத்தியர் - ஆண்/ பெண் (தொண்டர்)

* இலங்கை வைத்திய சபையினால் அனுமதிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற BDS (Sri Lanka) அல்லது அதற்குச் சமமான பட்டம். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 05 ஆண்டு சேவைக்காலத்திற்கு ERPM பரீட்சையில் சித்திபெற்று இலங்கை வைத்திய சபையில் அங்கீகாரம் பெறல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு இயலாத விண்ணப்பதாரிகள் ஐந்து (5) வருட சேவைக்குப்பின் நிறுத்தப்படுவார்கள்.

* தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ப்ளையின் ஒபீசர் தரத்தில் அதிகாரியாக சேர்த்துக்கொள்ளப்படுவதோடு ERPM பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை வைத்திய சபையின் நிரந்தர சான்றிதழின் பின் ப்ளைட் லெப்டினன்ட் தரத்திற்கு கொண்டுவருவது பற்றி கவனத்திற் கொள்ளப் படும்.

*பல் மருத்துவ மாணவர்-ஆண்/பெண் (நிரந்தர)*

* பைலட் ஒபிசர்.- BDS 2 ஆவது பகுதியை முடிவுசெய்து 3 ஆம் வருட ஆரம்பத்தில் இருக்கும் மாணவர் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

* ப்ளையின் ஒபிசர்.- இறுதி BDS முதற்கட்டம் முழுமையான பிறகு இறுதி வருடம் BDS பயிலும் மாணவர் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு :

(1) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ப்ளைட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தர அலுவலராக தேர்ந்தெடுக்கப்படுவதோடு அவர்கள் அன்றிலிருந்து பத்து வருடங்கள் கட்டாய சேவையில் ஈடுபடுத்தப் படுவார்கள்.

(2) தேர்ந்தெடுக்கப்படும் பல் வைத்திய மாணவர்கள் இறுதி வருடம் முடியும்வரை வான் படையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். பல் வைத்திய BDS பட்டத் தினை முடித்த பின்னும் வைத்திய சபையில் பதிவாகியதும் அவர்கள் ப்ளைட் லெப்டின்ட் நிலையில் நிரந்தரப்படுத்தப்படுவார்கள்.

(3) கல்வித் தொழிற்பாடுகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப் படும்.

(4) பல் வைத்திய மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் வருடத்தை காட்டக்கூடிய ஆவணங்களை விண்ணப் பத்துடன் அனுப்பிவைக்கவும்.

(ஈ) ***பரிபாலன இசைக்குழு பிரிவு :***

*இசைக்குழு அதிகாரி - நடனக்குழு - ஆண்/பெண் (நிரந்தர)*

ஒரு அமர்வில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி உட்பட குறைந்தபட்சம் 4 திறமைச் சித்திகளும், சிங்களம்-தமிழ் ஆகியவற்றிற்கு சித்தி உட்பட 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இலங்கையின் கலை நிறுவனமொன்றில் பெற்ற நடன பட்டம் அல்லது இலங்கையின் தேசிய நடன சங்கீத (நடன) கடைசி பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தேசிய சர்வதேச நடனம் முதலியவற்றில் புது கண்டுபிடிப்பு களை அறிமுகப்படுத்தக்கூடிய ஆற்றல் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் நடன பாடத்திற்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

3. **வேறு தகைமைகள் :**

(அ) தேசிய இனம்.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்

(ஆ) குடியியல் நிலை.- விவாகமானவர்/விவாகமாகாதவர்

(இ) பால்.- ஆண்/பெண் (தேவையைப் பொருத்து)

(ஈ) வயது.- 2013, ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதிக்கு -

(1) ***விமானத்தள நிர்மாணப் பிரிவு, பல் வைத்தியம் மற்றும் (பயற்சிபெறும்*** *Pre-Intern வைத்தியர்)* போன்ற பிரிவுகளில் விண்ணப்பதாரிகளுக்கு.- 18-35 வயதுக்கு கூடாதிருத்தல் வேண்டும்.

(2) உபகரணப் பிரிவு மற்றும் பல் வைத்தியப் பிரிவு (பல் வைத்திய மாணவன்) போன்ற பிரிவுகளில் விண்ணப்பதாரிகளுக்கு.- 18-30 வயதுக்கு கூடாதிருத்தல் வேண்டும்.

(3) பரிபாலன இசைக்குழு பிரிவு போன்ற பிரிவுகளில் விண்ணப்பதாரிகளுக்கு.- 18-36 இற்குக் கூடாதிருத்தல் வேண்டும்.

(உ) உயரம்.- ஆண்கள் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும் ; பெண்கள் 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும்

(ஊ) நிறை.- இலங்கை விமானப்படை உடற்பருமன் சுட்டிக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

$$\text{உடற்பருமன் சுட்டி} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம்}^2\text{ (மீ)}}$$

(எ) மார்பு.- ஆண் 32" (குறைந்தது)

(ஏ) பார்வை வர்ணப்பதிவு மட்டம்.- CP2

(ஒ) தொலைபார்வை.- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடியுடன் அல்லது மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப் படாமல்)

4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

5. வான்படை ஆளுனரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவ தற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆக்கப் பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை வான்படையில் நிரந்தர/தொண்டர் நிலைகளில் பைலற் ஒபிசர்/பிளையிங் ஒபிசர்/பிளைட் லெப்டினன்ட்/ஸ்குவார்டன் லீடர் தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஆளுநரினால் தீர்மானிக்கப்படும் இடங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப்படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

10. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

11. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப் படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டா. வான்படையிலிருந்து ஓய்வுபெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

12. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

13. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஆண்/பெண்ணுக்கு ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

14. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (உ) (17) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ள வாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :

| | |
|---|---|
| பைலற் ஒபீசர் | - ரூபா 2,42,700 |
| ஃபிளையிங் ஒபீசர் | - ரூபா 2,75,220-34 X 7,740 = ரூபா 5,38,380 |
| ப்ளைற் லெப்டினன்ட் | - ரூபா 3,21,660-28 X 7,740 = ரூபா 5,38,380 |
| ஸ்குவாட்ரன் லீடர் | - ரூபா 3,52,620-24 X 7,740 = ரூபா 5,38,380 |
| விங் கமாண்டர் | - ரூபா 3,62,100-20 X 9480 = ரூபா 5,51,700 |
| குறூப் கப்ரன் | - ரூபா 4,41,060-18 X 12,600 = ரூபா 6,67,860 |

(ஆ) பல் வைத்திய அதிகாரிகளுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :

| | |
|---|---|
| பல் வைத்திய | - ரூபா 3,06,180-3 X 7,740-ரூபா 3,29,400 |
| தரம் II | - ரூபா 3,37,140-8 X 7,800 = ரூபா 3,99,540 |
| தரம் I | - ரூபா 4,12,140-15 X 12,600 = ரூபா 6,01,140 |
| விசேட தரம் | - ரூபா 5,08,680-12 X 15,720 = ரூபா 6,97,320 |

(இ) பல் வைத்திய அதிகாரிகளுக்கான சம்பளம் பின்வருமாறு :

(1) ஓய்வூதியக் கொடுப்பனவு :

| | |
|---|---|
| பல் வைத்திய | - ரூபா 1,700 மாதமொன்றுக்கு |
| தரம் II | - ரூபா 1,700 மாதமொன்றுக்கு |
| தரம் I | - ரூபா 3,400 மாதமொன்றுக்கு |
| விசேட தரம் | - ரூபா 3,400 மாதமொன்றுக்கு |

(2) ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு :

| | |
|---|---|
| பல் வைத்திய | - ரூபா 2,125 மாதமொன்றுக்கு |
| தரம் II | - ரூபா 1,700 மாதமொன்றுக்கு |
| தரம் I | - ரூபா 400 மாதமொன்றுக்கு |

(3) மேலதிக வேலை கொடுப்பனவு - ரூபா 20,000 மாதமொன்றுக்கு

(4) மேலதிக வேலைப்படி :

| | |
|---|---|
| பல் வைத்திய | - ரூபா 300 மாதமொன்றுக்கு |
| தரம் II | - ரூபா 325 மாதமொன்றுக்கு |
| தரம் I | - ரூபா 370 மாதமொன்றுக்கு |
| விசேட பிரிவு | - ரூபா 450 மாதமொன்றுக்கு |

(5) (15) (ஈ) காணப்படும் சேவை கொடுப்பனவுகள் கீழ்க்காணப்படும் முறைக்கமைய வழங்கப்படும் :

(ஈ) சேவைக் கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 6,600 ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் வழங்கப்படும் ;

(3) கடினப்படி மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,000 ;

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம்) ;

(6) மேலதிக கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000 ;

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255);

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 13,861.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடிய ரூபா 637.50 வரை) ;

(11) அடிப்படைப் படியில் 15 சதவீதம் விசேட கொடுப்பனவாக தரப்படும் ;

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும் பிள்ளைகளுக்கும்) ;

(13) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டண செலவு மீளளிப்பு ;

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும் ;

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத்தினருக்கும்) ;

(16) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ.போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும் ;

(17) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஒபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600 இலிருந்து ரூபா 4,250 வரை) வாடகைப்படிகள் கொடுப்படற்பாலனவாகும் ;

(18) சேவை கொடுப்பனவு ரூபா 300, ரூபா 400, ரூபா 500 (வைத்தியர்களுக்கு முடிவுற்ற சேவைக்காலத்தைப் பொறுத்து) ;

(19) மேலதிக கொடுப்பனவு ரூபா 1,500 (பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்) ;

(20) 1/ 20 கொடுப்பனவு மாதமொன்றுக்கு அடிப்படைச் சம்பளம் X 1/ 20 X 3 நாட்கள் மட்டும் (பல் வைத்தியருக்கு மாத்திரம்).

16. ஓய்வூதியங்கள்/ பணிக்கொடுப்பனவு என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டக் சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படுமாகும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

(அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 08, மாச்சு 2013 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர் விண்ணப்பம் ........................ பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/ சபையின்/ குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) விண்ணப்பதாரரை நன்கு அறிந்தவரான பொறுப்புவாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;

(4) விளையாட்டுத்துறைகள், சாரணர் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(5) விண்ணப்பதாரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

**குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பதாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்பொழுது கட்டாயமாக வைத்திருத்தல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால்

விண்ணப்பதாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன.**- (அ) மேற்கூறப் பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை அதிகாரியின் பணிப்பிற் கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப் படும் :-

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டாது.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத் தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப் படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

(எச். டி. அபேவிக்ரம),
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் ................. பிரிவில் அரசாணைபெற்ற அலுவலர் பதவி

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரஜையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவுமுறையிலா பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.) :----.

2. முழுப் பெயர் :----.
(தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு)

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. விண்ணப்பிக்கும் துறை :----.

5. விண்ணப்பிக்கும் பிரிவு :----.

6. நிரந்தர முகவரி :----.

7. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிசு நிலையம் : ----.

8. அஞ்சல் முகவரி :----.

9. இணையதள முகவரி :----.

10. பிறந்த திகதி :----.

11. உயரம் :----.

12. மாவட்டம் :----.

13. தேர்தற் தொகுதி :----.

14. கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் இலக்கம் :----.

15. தொலைபேசி இலக்கம் :----.

16. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

17. பாடசாலை அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் : ----.

| பாடசாலை/ சர்வகலாசாலை | பரீட்சை | ஆண்டு | பொதுப் பாடசாலைகளும் சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா./த.)<br>க.பொ.த. (உ./த.)<br>தொழில் தகைமைகள் வேறு | | |

18. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

*19.* பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

*20.* பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

*21.* விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----.

(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

*22.* புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

*23.* இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை : ----.

*24.* இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

*25.* சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக : ----.

*26.* இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் : ----.

*27.* நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

*28.* விண்ணப்பகாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை- மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத் துள்ள விடைகள் யாவும் என் அறிவிற்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என கீழ்ப்படிவுடன் உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப் பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

*3-212*

## இலங்கை நிரந்தர வான்படை

### வான்படை வீரர்களுக்கான தொழிற்துறை வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழே தரப்பட்டுள்ள வானூர்தி பொறியியல் தொழில் துறைகளில் வான்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன :

1. (அ) தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும் :

(1) ***வானூர்தி பொறியியல் (ஆண்) :***
*(அ) வானூர்தி இயந்திரவியலாளர் (ஆண்)*
*(ஆ) வானூர்தி அமைப்பு எந்திரவியலாளர் (ஆண்)*
*(இ) வானூர்தி மின்னியல் கருவிகள் எந்திரவியலாளர் (ஆண்)*
*(ஈ) கருவிகள் பாதுகாப்பு உதவியாளர் (ஆண்)*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும், அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியும் உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள்.*

*(ஆ) ஏனைய தகைமைகள்.-* மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(அ) *தேசிய இனம்.-* ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) *வயது.-* 2013, ஏப்பிறல் 20 ஆந் திகதியன்று ஆண் 18 - 23 வயது வரை.

(இ) *உயரம்.-* ஆண் - 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்.

(ஈ) *உடல் நிறை.-* 17< உடற்பருமன் சுட்டி <25

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் }^{2}\text{(மீ)}}$$

(உ) *பார்வை வர்ணப்பதிவு மட்டம்.-* (CP2)

(ஊ) *தொலைபார்வை.-* இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(எ) *குடியியல் நிலை.-* விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதுடன் தொழிற்பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய வான்படை வீரர்களுக்கு அனுமதி வழங்கப்படும்).

2. பந்தி 1, 2 இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித் திறமைகளை நிறைவுசெய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற்தகைமை மட்டத்தைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள்.

சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப் படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

3. விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் கவனத்திற்கொள்ளப்படும்.

**4. சேவை நிபந்தனைகள் :**

(அ) வான்படை வீரர்கள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர் களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய வான்படை வீரர்கள் அடிப்படைப் பயிற்சியும் அதன்பின் தொழில்துறைப் பயிற்சியும் வழங்கப்பட்டு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

**5. தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளுமாறு கேட்கப்படுவார்கள். மேலும், 8 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 4 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது, மீண்டும் அழைக்கப்படும்போது சமுகமளிக்க வேண்டும். இலங்கை வானூர்தி கொமாண்டர் அவர்களின் தற்றுணிப்பின்பேரில் 8 ஆண்டுகள் கழிந்தபின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர் களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

**6. அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

**7. சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

ஒரு வருடத்திற்கு வான்படை வீரர்களுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :-

| | | |
|---|---|---|
| விமான வீரன் | : | ரூபா 1,73,100-6 x 1,740-19 x 2,040 = ரூபா 2,23,300 |
| முன்னணி விமான வீரன் | : | ரூபா 1,78,320-4 x 1,740-19 x 2,400 = ரூபா 2,23,300 |
| கோப்ரல் | : | ரூபா 1,83,540-10 x 2,040 - 9 x - 2,880 - = ரூபா 2,29,860 |
| சார்ஜன்ட் | : | ரூபா 1,87,620-3 x 2,040 - 9 x 2,880 - 3 x 3,840 = ரூபா 2,31,180 |
| பிளைட் சார்ஜன்ட் | : | ரூபா 1,91,700-1 x 2,040 - 9 x 2,880 - 3 x 3,840 = ரூபா 2,31,180 |
| அதிகாரம்பெற்ற அலுவலர் | : | ரூபா 1,99,500 - 7 x 2,880 - 14 x 3,840 = ரூபா 2,73,420 |
| பிரதான அதிகாரம்பெற்ற அலுவலர் | : | ரூபா 2,23,500 - 13 x 3,840 = ரூபா 2,73,420 |

மேற்குறிப்பிட்ட சம்பளத் திரட்டு விகிதங்களுக்கு ஏற்புடையதாக சம்பள கொடுப்பனவுகள் வழங்கப்படும். சேவைக்காலத்தில் அவரவர் நன்னடத்தை, சேவை ஆற்றல் ஆகியவற்றிற்கிணங்க உயர் நிலைகள் கிடைக்கப்பெறுவதுடன் அதற்கிணங்க வான்படை வீரர்களுக்கான/ வீராங்கனைகளுக்கான சம்பள விகிதங்களும் திருத்தப்படும்.

**8. வேறு கொடுப்பனவுகள் :**

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 660 ;

(2) கடினப்படி - மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(3) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 3,900 வழங்கப்படும் ;

(4) விசேட கடினப் படி.- விசேட கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 2,400 வழங்கப்படும் (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80 வீதம்) ;

(5) விசேட கொடுப்பனவு.- அடிப்படைச் சம்பளத்தில் 15% ;

(6) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.- சேவைக்காலம் 5 வருடங்கள் பூர்த்தியடைந்தபின் இக்கொடுப்பனவு வழங்கப்படும் (மாதமொன்றுக்கு ரூபா 250 இலிருந்து 850 வரை) ;

(7) உணவுக்கான கொடுப்பனவு.- வெளியில் தங்கும் வான்படை வீரர்/வான்படை வீராங்கனைகளுக்கு மாதமொன்றுக்கு ரூபா 12,235.20 (உள்ளே தங்கும் வான்படை வீரர் இலவச உணவு வசதி) ;

(8) தங்குமிட வசதி.- உள்ளே தங்கும் வான்படை வீரர்களுக்கு இலவசம் ;

(9) பிரயாணம்.- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பிரயாணச்சீட்டுகள் (வீரர்/ வீராங்கனைக்கும் கணவருக்கும் பிள்ளைகளுக்கும்). உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணச்சீட்டுகள் அல்லது பஸ் வண்டிக் கட்டண செலவினம் செலுத்தப்படும் ;

(10) கலவரகாலப்படி.- நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப்பனவு வழங்கப்படும் (விவாகமானவர், விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(11) தகைமைச் சம்பளம்.- விசேட பயிற்சிநெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத்தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும் ;

(12) நன்னடத்தைப் பதக்கம் சம்பளம்.- மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30 இலிருந்து ரூபா 204 வரை வழங்கப்படும் ;

(13) சீருடைக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 170 வழங்கப்படும் ;

(14) மீள அமர்த்தலுக்கான சம்பளம்.- மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணியினர் ரூபா 300 க்கு உரித்துடையவராவர் ;

(15) மருத்துவம்.- வான்படையின் செலவில் வான்படை வீரர்களுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(16) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (கி. மீ. 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்களுக்கு இ. போ. ச. பேரூந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும்.

(17) விவாகமான வான்படை வீரர்களுக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு ரூபா 1,200 இருந்து 3,300 வரை வாடகைப்படியொன்றுக்கு உரித்துடையவராவர்.

(18) விரிவுரையாளர் கொடுப்பனவு.- மாதமொன்றுக்கு ரூபா 425 இலிருந்து ரூபா 510 வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர்.

(19) வேறு கொடுப்பனவுகள்.- (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

(20) ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவு தொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

9. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு துறையில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பக்காரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா) ;

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ் ;

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்ற தொழில்துறை/ தொழில்நுட்பப் பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் ;

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பக்காரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்புவாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பக்காரரின் தொழில்தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்) ;

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலியவற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பக்காரர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா.

10. நேர்முகப் பரீட்சை.- தொழிற்றுறை பயிற்சி பாடசாலை, இலங்கை வான்படை, ஏக்கல நிலையத்தில் நேர்முகப் பரீட்சை 2013, மாச்சு 6, 7 மற்றும் 8 ஆந் திகதிகளில் 9.00 மணி முதல் 13.00 மணிவரை நடைபெறும். விமானப்படை ஆள்திரட்டற் சபையொன்றின் முன்னிலையில் தங்கள் சொந்தச் செலவில் நேர்முகப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும்.

11. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பக்காரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பக்காரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

11. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பக்காரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வுசெய்யப்படுவர்.

12. விண்ணப்பக்காரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பக்காரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தனித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரை தகைமையிழக்கச் செய்யும்.

13. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பக்காரரை ஆளாக்கிவிடும்.

14. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பக்காரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

எச். டி. அபேவிக்ரம,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

வான்படை வீரர்களுக்கான ............................................. பதவி

1. முழுப் பெயர் :----.

(தேசிய ஆளடையாள அட்டைப்படி)

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

3. விண்ணப்பிக்கும் தொழில் துறை :----.

4. அஞ்சல் முகவரி :----.

5. நிரந்தர முகவரி :----.

6. நிரந்தர முகவரியின் பொலிசு நிலையம் :----.

7. மாவட்டம் :----.

8. தேர்தற் தொகுதி :----.

9. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

10. தொலைபேசி இலக்கம் :----.

11. பிறந்த திகதி :----.

12. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

13. பால் :----.

14. உயரம் : அடி ---- அங்குலம் ----.

15. க. பொ. த. (சா. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

16. க. பொ. த. (உ. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

17. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் :----. (தொழில்நுட்பம், தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன)

18. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விபரம் : ----.

19. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.

20. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விபரங்கள் தரவும் :----.

21. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.

22. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் :

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

23. **விண்ணப்பக்காரரால் கையொப்பமிட வேண்டிய வெளிப் படுத்துகை :**

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பக்காரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

3-213

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

## இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013, சனவரி 11 ஆந் திகதிய (வெள்ளிக்கிழமை) 1793 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் என்ற பகுதியின்கீழ் மேற்படி தலைப்பில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பக்க இலக்கம் 42 இல் II(V) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையில் எந்தவித மாற்றமும் ஏற்படாது என்பதோடு அங்கு அடைப்புக்குள் குறிப்பிடப்பட்டுள்ள "அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய பதவிக்கு விண்ணப்பிக்கும் தகைமை பெறுகின்ற உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது'' என்பதற்குப் பதிலாக கீழ்வரும் பந்தியினை உட்சேர்க்கின்றேன்.

**குறிப்பு**.- (i) மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்/அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் சந்தேகத்திற்குரிய ஆவணங்கள் தொடர்பான பரீட்சகர்/நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உதவி மண் இரசாயனவியலாளர்/ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்/வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவி வனப் பாதுகாவலர்/தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (விலங்கியல்) போன்ற பதவிகளுக்காக விண்ணப்பிப்பதற்கு தற்போது அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது. மேலும் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் மேற்படி பதவிக்காக விண்ணப் பிக்கும் பரீட்சார்த்தி முன்னாள் இராணுவ வீரராயின் நிரந்தர இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்த காலம் உச்ச வயதெல்லைத் தகைமைகளைப் பெறுவதற்காக குறித்த வயதிலிருந்து குறைக்கப்படுவ தற்கு இடமளிக்கப்படும்.

(ii) அவ்வாறே தொழில் திணைக்களத்தின் ஆராய்ச்சி உத்தியோ கத்தர் (தொழில்சார் சுகாதாரம்)/ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்/சுகாதார சேவைகள் திணைக்களத்தின் விலங்கியல் பரிசோதகர், பௌதீகவியல் விஞ்ஞானி, மருந்துப் பகுப்பாய்வாளர், பிரதேச மலேரியா தடுப்பு உத்தியோகத்தர், இரசாயனவியலாளர், விஞ்ஞான உத்தியோகத்தர் போன்ற பதவிகளுக்காக விண்ணப்பிப்பதற்கு தற்போது அரச சேவையிலுள்ள/ மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பி. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2013, பெப்புருவரி.

3-184

## இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை - 2013

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2013 யூன் மாதம், நகர இல. 1 கொழும்பு மற்றும் நகர இலக்கம் 2 யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடாத்தப்படும். விண்ணப்பப் படிவத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரம் பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2013.03.27 என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

2. வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பப் படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. அந்த மாதிரிப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரி தனது விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப் படிவம் A4 அளவிலான கடதாசியைத் தவிர வேறு எந்தக் கடதாசியிலும் தயாரிக்கப்படலாகாது. இலக்கம் 01 தொடக்கம் 07 வரையில் முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலுமாக தயாரித்துக் கொள்ளல் வேண்டும். அதனை விண்ணப்பதாரர் தனது கையெழுத்துக்களினால் நிரப்புதல் வேண்டும். மேலும் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படும் போது அங்கே தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவத்தில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப் படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் இல்லாத விண்ணப்பப் படிவங்களும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் மற்றும் பூர்த்தி செய்யப்படாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் இரண்டிற்கும் தோற்றுவதற்கு எதிர்பார்ப்பதாயின் அதுபற்றி சரியாக குறிப்பிட்டுள்ள இரண்டு விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தில் மேலே உள்ள தகவல்களை உரிய முறையில் 7(i) அல்லது (ii) தகவல்களை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். மேலும், இந்த இரண்டு பரீட்சைகளுக்கும் பரீட்சைக் கட்டணம் தனித்தனியாகச் செலுத்தி இரண்டு பற்றுச்சீட்டுக்களைப் பெற்று தனித்தனியாக ஒட்டுதல் வேண்டும்.

3. விண்ணப்பப் பத்திரங்கள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக (பிரதேச செயலகங்களாயின் பிரதேச செயலாளரின் ஊடாக) 2013.03.27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பத்தரமுல்லை, பெலவத்தை, ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் என்பதுடன், விண்ணப்பப் படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்படல்

வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தின் போட்டோ பிரதியொன்று தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாக அமையும். பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் என்பதுடன், விண்ணப்பித்த மொழி பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது. அரச கரும மொழிக் கொள்கை பற்றிய விடயம் தொடர்பாக புதிய பிரவேச உத்தியோகத்தர்களினால் தமது விண்ணப்பம் அரச கரும மொழியில் அல்லது தாம் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழியின் பிரகாரம் தமிழ் மொழியில் அல்லது ஆங்கில மொழியில் தயாரித்து அனுப்ப முடியும்.

4. விண்ணப்பங்கள் அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கால அட்டவணைப் பிரதியொன்றுடன் அனுமதிப் பத்திரம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு பிரவேசப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாவிடில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவம் மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று டன் பதிவு செய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு அப்பால் உள்ள பிரதேசமாயின் பிரவேசப் பத்திரத்தை அனுப்பிவைக்கக் கூடிய தொலைநகல் முகவரியொன்றும் குறிப்பிடப்பட்ட உங்களது வேண்டு கோள் கடிதத்தை இலங்கை பரீட்சை ஆணையாளருக்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாகவிருக்கும்.

(i) பரீட்சையின் பெயர் :----.

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :----.

(iii) முழுமையான முகவரி :----.

(iv) விண்ணப்பப் படிவம் தபாலில் இடப்பட்ட தபால் அலுவலகம் :----.

(v) பதிவு இலக்கம் மற்றும் திகதி :-

5. **ஆளடையாளம்.**- விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற எல்லா விடயங்களின் போதும் பரீட்சை மண்டப அதிபதிக்கு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்கென கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களிடையில் ஒன்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

மேற்கூறப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க இயலாத விண்ணப்ப தாரி ஒருவரின் அபேட்சகத் தன்மையை நிராகரித்தல் அல்லது ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு பரீட்சைகள் ஆணையாளருக்கு அதிகார முண்டு.

6. பரீட்சைக் கட்டணம்.- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சை விண்ணப்பதாரர்களிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும்.

பரீட்சைக் கட்டணம் :

(அ) முதலாவது தடவைக்கு இரண்டு வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்கும் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) முதலாவது தடவையின் பின்னர் ஒவ்வொரு வினைத் திறன்காண் தடைப் பரீட்சைக்காகவும் ரூபா 400.00 வீதம் அறவிடப்படும்.

(இ) ஒரு பாடத்திற்கு ரூபா 200.00 அறவிடப்படும்.

உரித்துடைய பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளரின் வருமானத் தலைப்பு இல.2003-02-13 இற்கு வரவிலிடப்படக்கூடியதாக நாட்டிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலேனும் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் அதன் ஓரத்தைக் கழன்று போகாத வகையில் ஒட்டவும். பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியொன்று தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானதாக இருக்கும். வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகள் இரண்டிற்கும் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணத்தைத் தனித்தனியே செலுத்திய இரண்டு பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டு உரிய விண்ணப்பப் படிவங்களில் ஒட்டுதல் வேண்டும்.

7. இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்படும் என்பதுடன், அவரினால் பரீட்சை நடாத்தப்படுதல் மற்றும் பெறுபேறு வெளியிடப்படல் தொடர்பாக விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்படுத்தப்படுவர். இந்த வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (II அ) பந்தியின்கீழ் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள பரீட்சை விண்ணப்பதாரர்களுக்கான ஒழுங்குவிதிகள் இப்பரீட்சைக்கும் உரித்துடையதாகும். பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டப அதிபதிக்கு தங்களது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை உள்ள மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பிரவேசப் பத்திரமொன்று வழங்கப் பட்டுள்ள தங்களது திணைக்கள/ அலுவலகங்களிலுள்ள உத்தியோ கத்தர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திணைக்கள/ அலுவலக தலைவர்களினால் கடமை லீவு வழங்கப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதுடன், பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் ஒன்றினை வழங்கியமையால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளாரெனக் கருதக் கூடாது.

9. இந்த ஒழுங்கு விதிகளில் அடங்கியில்லாத ஏதேனும் விடயமொன்று இருப்பின் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின்படி அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் அங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் ஒவ்வொரு மொழியிலும் வெளியிடும் போது யாதேனும் பொருத்தமற்ற தன்மைக் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப் பெறும்.

11. முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையுடன் தொடர்புடைய பாடத்திட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைப் பரீட்சைக்கான பாடத்திட்டம்**

(அ) முதலாவது வினைத்திறன் தடைப்பரீட்சை பின்வரும் விடையங்களில் ஒவ்வொன்றும் 03 மணித்தியாலங்களைக் கொண்ட 04 வினைத்தாள்களைக் கொண்டிருக்கும் ;

1. அரசாங்க நிதி நடைமுறைகள்
(பாட எண் - 01) – 100 புள்ளிகள்
2. சட்டமும் முகாமைத்துவமும்
(பாட எண் - 02) – 100 புள்ளிகள்
3. நிருவாகம் (பாட எண் - 03) – 100 புள்ளிகள்
4. அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல் வழங்ககுதல்
(பாட எண் - 04) – 100 புள்ளிகள்

(ஆ) சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் நியமனக் கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய காலப் பகுதியினுள் அல்லது அதற்கு முன்னர் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். மேலும் சகல பாடங்களுக்கும் ஒரே முறையில் அல்லது தனித்தனி தடவைகளில் தோற்றுவதற்கு உத்தியோகத்தர் ஒருவருக்கு இடமுண்டு.

(இ) பரீட்சார்த்திகள் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு வினாத் தாளிலும் 40% புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**பாடத்திட்டம் :**

***1. அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் (பாட எண் - 01)***

நிதி ஒழுங்கு விதிகளின் பிரயோகம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், திறைசேரி சுற்றறிக்கைகள், வருமானம், செலவினம், வெளிநாட்டு உதவி, வருடாந்த மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகள். அரச படுகடன் வழங்கல், கேள்விப்பத்திரங்கள், கட்டு நிதிகள் மற்றும் முற்பணங்கள் நாட்டின் கணக்கு, தொழிற்பாட்டு மற்றும் பொருளாதார வகுப்பாங்கங்கள், வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டமும் செயலாற்றுகையும், நிதி அமைச்சரின் பணிகள், பொதுத்திறைசேரி, திட்டமிடல் அமைச்சு, செயலாளர்கள் கணக்காய்வாளர், மற்றும் அரச கணக்குகள் குழு என்பன தொடர்புற்ற நிதி ஒழுங்கு விதிகளும்/ நடைமுறைகளும் என்பன பற்றி பரீட்சார்த்திகள் பரிசோதிக்கப்படுவர்.

***2. சட்டமும் முகாமைத்துவமும் (பாட எண் - 02)***

***சட்டம் :***

சட்டத்தின் வரைவிலக்கணம்
இலங்கையின் சட்ட முறைகள்
இலங்கையின் நீதிமன்ற முறைகள்
ஒப்பந்தச் சட்டம்
முகவராண்மைச் சட்டம்
பொருட்களின் விற்பனை
வாடகைக் கொள்வனவு
பேரம் பேச்சு வார்த்தை சாதனங்கள்
பிணையங்களின் உத்தரவாதம்
காப்புறுதி

***முகாமைத்துவம் :***

முகாமைக்கான அறிமுகம்
முகாமையாளர்களது பணிகளும் தேர்ச்சியும்
திட்டமிடல் செயல்முறையும் ஒழுங்கமைப்பு முறை மட்டங்கள் அமைத்தலும்
ஒழுங்கமைவு அமைப்பு
மனித வளங்களின் முகாமை
செயலாற்றுகை மதிப்பீடு
மேம்படுத்தல்
தலைமைத்துவம்
தொடர்பாடல்
தீர்மானம் எடுத்தல்
பிரச்சினைகளைத் தீர்த்தல்
மாற்றத்தை முகாமை செய்தல்
முகாமைத்துவ சிக்கல்கள்
முகாமைத்துவக் காலம்
தர வட்டம், உற்பத்தி மற்றும் பலன்
முகாமைத்துவ நன்நெறியும் பொறுப்புக்களும்

***3. நிர்வாகம் (பாட எண் - 03)***

தாபன விதிக் கோவையின் VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII அத்தியாயங்கள். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள் தொகுதி ஒன்றின் i முதல் vi வரையிலான அத்தியாயங்கள்.

***4. அறிக்கை எழுதலும் முகாமைக்கு தகவல் வழங்குதலும் (பாட எண் - 04)***

தொடர்புடைய தகவல் பயன்பாடு
காலத்திற்குரிய அறிக்கைகள்
கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள், அறிக்கைகள் எழுதுதல்
முகாமைத்துவ அறிக்கைக் கட்டமைப்பு
வெளிப்படுத்த வேண்டிய முக்கிய பெறுபேறுகள்
பெறுபேறுகளை வரைவிலக்கணப்படுத்தல்
வேறுபாடுகளுக்கான முன்மொழிவுகள்
தரவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் புள்ளிவிபர முறைகளின் உபயோகம்
செயலாற்றுகையினை ஒப்பீடு செய்தல்
முகாமைத்துவ அறிக்கைகளின் வீதங்கள் பயன்பாடு
வரைபடம் மூலம் விளக்குதல்
தொழிற்றுறைச் சொற்பொழிவுகள், விரிவுரைகளுக்குச் செவிமடுத்தல்
விரிவுரைகளை வாய்மொழிமூலம் அறிவித்தல்
குழுமக் கலந்துரையாடல்கள்
கருத்தரங்குத் திறமைகள்
உரை நிகழ்த்துதல்

